இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 35 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆவணி 28 – திங்கள்கிழமை 14 செப்டம்பர் 2026 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 35 : Thiruvalluvar Year - 2057 - Aavani 28 - Monday 14 September 2026 - Trichy ★★ 12 Pages ₹ 5.00



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (12.9.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் ”திராவிட வெற்றிக் கழகத்தின் தலைவர் மல்லை சத்யா அவர்கள் தலைமையில் மாநில நிர்வாகிகள் நேரில் சந்தித்து, நடைபெறவிருக்கும் 2026 சட்டப்பேரவை இடைத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்குத் திராவிட வெற்றிக் கழகம் முழு ஆதரவு அளிப்பதாகவும், இடைத்தேர்தல் நடைபெறும் மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டமன்றத் தொகுதிக்கு அறிவிக்கப்பட்டுள்ள கழக வேட்பாளர்களின் வெற்றிக்கு திராவிட வெற்றிக் கழக நிர்வாகிகள் தோழர்கள் முழுமையாக பாடுபடுவார்கள் என தெரிவித்தனர்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (12.9.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் ”தேசிய சிறுபான்மையினர் மக்கள் இயக்கத்தின் நிறுவனர் தேசிய தலைவர் டாக்டர் ஜோயல் சுந்தர்சிங் அவர்கள் தலைமையில் மாநில நிர்வாகிகள் நேரில் சந்தித்து, நடைபெறவிருக்கும் 2026 சட்டப்பேரவை இடைத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு தேசிய சிறுபான்மையினர் மக்கள் இயக்கம் முழு ஆதரவு அளிப்பதாகவும், இடைத்தேர்தல் நடைபெறும் மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டமன்றத் தொகுதிக்கு அறிவிக்கப்பட்டுள்ள கழக வேட்பாளர்களின் வெற்றிக்கு தேசிய சிறுபான்மையினர் மக்கள் இயக்க நிர்வாகிகள் தோழர்கள் முழுமையாக பாடுபடுவார்கள் என தெரிவித்தனர். அதுபோது செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், மாநில சிறுபான்மையினர் நலஉரிமை பிரிவு செயலாளர் டாக்டர் சுபேர்கான் ஆகியோர் உடனிருந்தனர்.

## அறிவிக்கப்படாத மின்வெட்டு! வீதிக்கு வந்து போராடும் மக்கள்! சரி செய்ய முயற்சிக்காமல்

# ‘ப்யூஸ்போன’ த.வெ.க. அரசு திசை திருப்பும் வேலைகளைச் செய்வதா?

## எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் காட்டமான கேள்வி!



சென்னை, செப். 14-

**“தமிழ்நாடு முழுவதும் அறிவிக்கப்படாத மின்வெட்டினால் பொதுமக்கள் வெகுண்டெழுந்து போராடிவரும் நிலையில் துறையின் அமைச்சர் தேவையில்லாத அவதூறுகளை அள்ளி வீசுவதா?” என்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளார்.**

இது குறித்து அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:

**நேற்று முதல் ஊடகங்களில் வெளி யாகி வரும் செய்திகள் இவை.**

**தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் அறிவிக்கப்படாத மின்வெட்டு, மின்சாரம் இருந்தாலும் voltage பிரச்சினை என மக்கள் வெகுண்டெழுந்து வீதிக்கு வந்து போராடிக் கொண்டு இருக்கிறார்கள்.**

**ஆனால், துறைக்குப் பொறுப்பு வகிக்கும் அமைச்சரோ, இதைச் சரி செய்யும் முயற்சி களைச் செய்யாமல் தேவையில்லாத அவதூறுகளை உளறிக் கொண்டிருக்கிறார்.**

**மின்சாரம், ஆவின் பால் விநியோகம் என மக்களின் அன்றாட அடிப்படைத் தேவை களையே பூர்த்தி செய்ய முடியாமல் திண்டாடும் 'ப்யூஸ் போன' த.வெ.க. அரசு திசைதிருப்பும் வேலை களை நிறுத்திவிட்டு, மக்கள் பிரச்சினை களில் கவனம் செலுத்த வேண்டும்.**

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.






சட்டமன்றத்தில் முதல்வர் விஜய்யின் அடாவடி ஆணவப் பேச்சைக் கண்டித்து செங்கல்பட்டில் மாவட்டச் செயலாளர், முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. கலந்துகொண்டு கண்டன உரையாற்றினார். உடன் மாவட்டக் கழக நிர்வாகிகள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட ஏராளமான பொதுமக்கள் பங்கேற்றனர்.




முதல்வர் விஜய் சட்டமன்றத்தில் பேசிய ஆணவ பேச்சைக் கண்டித்து திருச்சி மத்திய, வடக்கு, கிழக்கு, தெற்கு மாவட்டங்களின் சார்பில் மரக்கடை எம்.ஜி.ஆர். சிலை அருகே நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் தெற்கு மாவட்டச் செயலாளர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, வைரமணி, தியாகராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். உடன் கவிஞர் சல்மா எம்.பி., கதிரவன் எம்.எல்.ஏ., மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் சௌந்தரபாண்டியன், ஸ்டாலின் குமார், பழனியாண்டி, அன்பில் பெரியசாமி, கே.எம்.சேகரன், பரணிகுமார் உட்பட 5000க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.